

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

செப்டம்பர்
2005

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 5 கனி 10

## ஆசிரியர் கடிதம்

இயேசுவின் தூய நாமத்தில் வாழ்த்துக்கள். உங்களை இக் கடிதத்தின் மூலம் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இதுவரை தமிழகத்தில் பத்தொன்பது மாவட்டங்களில் வாசகர் கருத்தரங்கு நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். மீதமுள்ள பதினொரு மாவட்டங்களையும் சந்திக்க கர்த்தர் பெலன் கொடுப்பார் என நம்பிக்கையாயிருக்கின்றோம் உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு நமது மாத இதழை கொடுத்து **'கிறிஸ்துவின் வசனம்'** பரம்பி மகிமைப்பட உதவி செய்யுங்கள். உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.

"திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும் படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள். புறம்பேயிருக்கிறவர் களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" கொலோசெயர்4:4,5

**கிறிஸ்துவின் பணியில்,**
சகோ. அர்ஜுனன்

### நியாயப்பிரமாணம்

- நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம் – ரோம.3:19
- நியாயப்பிரமாணம் விசுவாசத்திற்குரியதல்ல – கலா.3:12
- நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே – கலா.2:16
- நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே – கலா.3:24,25
- நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டு பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் – கலா.5:4
- நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற் குட்பட்டிருக்கிறார்கள் – கலா.3:10
- நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக ....தம்முடைய குமாரனை அனுப்பினார் – கலா.4:4,5
- நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது...... அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே – ரோம.3:21,22
- நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது – கலா,6:14
- நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம் – எபி.7:19

**கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர்16:16)**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

*மரம் – 5* *செப்டம்பர் – 2005* *கனி – 10*


ஆசிரியருரை

## மேன்மையான உயிர்த்தெழுதல்
## Better Resurrection



மேன்மை மனிதனுக்கு பல வழிகளில் வருகிறது அவன் மேன்மையடைகிறான். ஆனால் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற ஒரே ஒரு வழி தான் உண்டு. அந்த வழியில் சென்றால் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையலாம். அந்த வழி இதோ! "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" (யோவா.11:25,26) என்றார் இயேசு. இவ்வசனத்தை நம்பக்கூடிய அனைவரும் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்வார்கள்.

அநேகருக்கு உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லை. நாளைக்கு நடப்பதை யார் பார்த்தது. புசித்தோம் குடித்தோம் நல்லபடியாக அனுபவித்தோம் என்று இல்லாமல் உயிர்த்தெழுதலாம், பரலோகமாம், இதையெல்லாம் யார் பார்த்தது என்று அலட்சியப்போக்கிலே உதாசினம் செய்கிறவர்கள் அநேகர் உண்டு. வேதாகமத்திலும் கூட இப்படிப்பட்டவர்களை குறித்து படிக்கின்றோம். "சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள்" (அப்.23:8). அப்படியென்றால் மரித்தோர் உயிர்த்தெழ மாட்டார்களா? இதைக்குறித்து பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது, "மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன்

சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே, நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய் அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதததற்கேற்ற மேனியைக் கொடுக்கிறார். எல்லா மாம்சமும் ஒரே விதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே, வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே; சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும் அழிவில்லாததாய் எழுந்திருக்கும்" (1கொரி.15:35-42). செத்துப்போன விதையைக் கவனித்துப் பாருங்கள் அவை விதைக்கப்படும்போது மறுபடியும் முளைக்க ஆரம்பிக்கிறது. மரித்துப்போன ஒருவன் அடக்கம் செய்யப்படுகிறான், அத்தோடு அவனுடைய கதை முடிந்து விட்டது என்றல்ல. அழிவுள்ள அவனுடைய சரீரம் அழிவில்லாததாய் எழுந்திருக்கும்.

"நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன்" (நீதி.14:32). ஏனென்றால் அவன் தன் நம்பிக்கையைக் கர்த்தர் மீதும் அவர் தமக்காக ஏற்படுத்தியுள்ள நித்தியத்திலும் வைத்திருக்கிறான். இவ்விதமான நம்பிக்கையை அப்போஸ்தலனாகிய பவுல் கொண்டிருந்தான். ஆகையால் அவன் "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" (பிலி.1:21) என்றான். மேன்மையான உயிர்த்தெழுதலை நினைக்கும் போது நமக்கு வரும் பாடுகளையும் உபத்திரவங்களையும் ஒரு பொருட்டாக எண்ணமாட்டோம். நம்முடைய முற்பிதாக்களும் இப்படியே இருந்தார்கள். "ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் **மேன்மையான உயிர்த்தெழுதலை** அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்" (எபி.11:35). உதாரணமாக, ஏரேமியா

போன்ற தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் விடுதலைபெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள். ஒருவேளை உயிருக்கு பயந்துபோய் மறுதலித்திருந்திருப்பார்கள் என்றால் விடுதலை பெற்றிருப்பார்கள். ஆனால் அவர்களோ மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு விடுதலை பெற சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள்.

மோசேயும் கூட "இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" (எபி.11:26). அநேகர் இன்றைய தேவைகளைத்தான் பார்க்கிறார்கள். மோசேயோ இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து வரக்கூடிய நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். இன்றைக்கு நாம் ஒவ்வொருவரும் மேன்மையான உயிர்த்தெழுதலை நினைத்தோமானால் நமக்கு வரக்கூடிய நிந்தையைப் பெரிதாக நினைக்க மாட்டோம். ஏனென்றால் "இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக் கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற் பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்" (ரோம.8:18:23). ஆம், பவுல் சொல்வதைப்போல நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம். எப்பொழுது உயிர்த்தெழுவோம், நம்மை தேவனோடு சேர்க்க எப்பொழுது இயேசு வருவார் என்ற ஆவலோடு காத்திருந்து தவிக்கிறோம்.

நம்முடைய தவிப்பு வீணாய்ப்போகாது. மேன்மையான உயிர்த்தெழுதலை அடைய முதலாவது நம்மை நாமே தாழ்த்தவேண்டும். நம்முடைய ஆண்டவரும் அவ்விதமே

தம்மைத்தாமே தாழ்த்தினார். "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும் , அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்" (பிலி.2:8,9) என்று வாசிக்கின்றோம். உன்னதமானவர், வானங்களிலும் பெரியவர், அவரால் எல்லாம் உண்டாக்கப்பட்டது. அப்படிப்பட்ட அவரே தம்மைத்தாமே தாழ்த்தியிருக்கும் போது நாம் எம்மாத்திரம்! சற்று சிந்தித்துப்பாருங்கள். "மேன்மைக்கு முன்னானது தாழ்மை" (நீதி.15:33). மேன்மையான உயிர்த்தெழுதலை அடைய வேண்டுமானால், அதற்கு முன் நம்மை நாமே தாழ்த்த வேண்டும். தாழ்மை என்பது தலை குனிந்து நடப்பதல்ல. மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையாக எண்ணவேண்டும். இதுவே தாழ்மை. "ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கொல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" (லூக்.21:36). கர்த்தர் பரிசுத்தர் அவருக்கு முன்பாக நிற்கக்கூடியவன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிக்கமுடியாது. ஆக, கர்த்தருக்குப் பயப்படும் பயத்துடனே ஜெபத்துடன் விழித்திருக்கவேண்டும்.

**மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்பது நிச்சயமாக நடைபெறக்கூடிய ஒன்று.** இதிலே எந்தவிதமான சந்தேகமும் உங்களுக்கு உண்டாகாது என்று நம்புகிறேன். "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது" (யோவா.6:40) என்றார் இயேசு. இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக் கிறவர்களை அவர் கடைசிநாளில் எழுப்புவார். அதற்கு முன் நீங்கள் செய்யவேண்டியது என்ன? நம்முடைய பாவத்திற்காக இயேசு மரித்தார் என நீங்கள் விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று உங்கள் பாவங்கள் போக கழுவப்படவேண்டும். இப்படிச்செய்யும்போது அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்படுகிறீர்கள். "அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும்

இணைக்கப்பட்டிருப் போம்" (ரோம.6:5) இவர்களே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள். இப்படிப்பட்டவர்கள் இயேசு மறுபடியும் வரும்போது "முதலாவது எழுந்திருப்பார்கள்" (1தெச.4:16). மேலும் "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரி.15:22). உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்துவுக்குள் நடைபெறக்கூடிய ஒன்று. நீங்கள் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? அல்லது கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கிறீர்களா? இன்றே கிறிஸ்துவுக்குள் அதாவது கிறிஸ்துவை ஏற்று, ஞானஸ்நானம்பெற்று, அவருடைய சரீரமாகிய சபைக்குள் வாருங்கள். இதுவே நீங்கள் கிறிஸ்துவுக்குள் வருவதற்கான வழி. இதையல்லாது நீங்கள் உங்களுடைய சுய வழியிலோ அல்லது மனித பாரம்பரிய வழியிலோ சென்றால் நீங்கள் மேன்மையான உயிர்த்தெழுதலை சந்திக்க இயலாது. கிறிஸ்து ஒருவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார்.

"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர் களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1கொரி.15:51-58). ஆமென்.

# ஏன் இயேசு சிலுவையில் மரித்தார்?
## Why Christ Died on The Cross?

- J.C.Choate



ஆதியில் தேவன் மனுஷனையும், மனுஷியையும் சிருஷ்டித்தபோது அவர்கள் குற்றமற்றவர்களாகவும் பாவமற்றவர்களாகவும் இருந்தனர். ஆனால் அவர்கள் அந்த பரிசுத்த நிலையில் அதிகநாட்கள் நிலைத்திருக்கவில்லை, சீக்கிரமாகவே அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் ஆவியில் மரித்து, அழகான ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டு, மனுஷன் தன் முகத்தின் வியர்வையால் ஆகாரம் புசிக்கவும், மனுஷி வேதனையோடே பிள்ளை பெறவும், முடிவிலே சரீரத்தில் மரிக்கவும் (ஆதி1-3) இப்படியாக தங்களுடைய பாவத்தின் விளைவினை அனுபவிக்க வேண்டிய வனானான். இப்போது மனுஷன் பாவம் தனக்கும் தேவனுக்குமிடையே வந்ததால் தேவனுடைய பகைஞனானான்.

மனுஷன் குற்றமற்ற நிலைக்கு வரும்படி தானே தன்னை பழைய நிலைக்கு திருப்பிக்கொண்டு வர இயலாதபடியினாலும், அதைப்போலவே மிருக பலி தன் பாவத்தை நிரந்தரமாக நிவர்த்தி செய்ய முடியாதபடியினாலும், உலகத்தின் பாவங்களுக்காக குற்றமற்ற பலியாயிருக்கும்படிக்கும் தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராக ஊழியஞ் செய்யும்படிக்கும் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி, இவ்விதமாக மனுஷன் தேவனிடத்திற்கு வர ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தினார் (எபி.10:4; ஆதி3:15). எனவே குறித்த காலத்தில் கன்னிகையாகிய மரியாளுக்குப் பிறக்கும்படி தேவன் தம்முடைய குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். மரியாளுக்கு நியமிக்கப் பட்டிருந்த யோசேப்புக்குக் கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் காணப்பட்டு, "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு **இயேசு** என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்" (மத்.1:21).

வாக்குரைத்திருந்தபடியும் தீர்க்கதரிசனம் உரைக்கப்

பட்டிருந்தபடியும் இயேசு இவ்வுலகத்தில் வந்தார் என அறிவிக்கப்பட்டிருக்கிறோம். ஆச்சரியம், ஆனால் தேவன் அவரை மரிக்கும்படிக்கு அனுப்பினார். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா.3:16-17) என வாசிக்கிறோம். தேவன் அவரை மரிப்பதற்கு மாத்திரம் அனுப்பவில்லை, பாவிகளுக்காகவும், தேவனற்றவர் களுக்காகவும், துன்மார்க்கருக்காகவும் அவர் மரித்தார். "அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக் கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோம.5:6-9) என பவுல் சொன்னார். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டு மென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவா.15:12-14) என்றார். "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயி ருக்கிறது' (1யோவா.4:9-10) என்று யோவான் எழுதினார்.

கிறிஸ்து பூமியிலே நன்மைசெய்கிறவராகவே சுற்றித்திரிந்தார். அவர் வியாதிகளை சொஸ்தமாக்கினார்,

குருடருக்குப் பார்வையளித்தார், மரித்தோரை எழுப்பினார், அவர் தேவனிடமிருந்து வந்தவர் என்பதை நிரூபிக்கும்படிக்கு இன்னும் அநேக அற்புதங்களைச் செய்தார். யோவான், "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவா20:30,31) என்றார்.

இயேசு பரிசுத்தமுள்ளவர், அவர் பாவமற்றவர். பவுல் இயேசுவைக்குறித்து பேசுகையில் தேவனைப் பற்றி, "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2கொரி.5:21) என்றார். "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை என்று பேதுரு (1பேது.2:22) கூறினார்.

மேலும் நாம், அவர் பாவமற்றவர், நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்த நல்ல மனுஷர், தேவனுடைய ஒரே பேறான குமாரன், உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என அறிவுறுத்தப்படுகிறோம். பவுல், "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்" (பிலி2:8) எனச் சொன்னார். பேதுரு, "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை, அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1பேது.2:21-24) மேலும், கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார் (1கொரி.15டுடு3) என்று பவுல் கூறினார்.

ஆனால் எதற்காக கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார், அதாவது யாரோஒருவன் ஏன் ஒரு நல்ல

மனுஷரை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்க விரும்பினான்? இருந்தபோதிலும் அவர் மனிதனை இரட்சிக்கும்படியாகவந்தார் மாறுபட்ட கருத்துடைய பாவம் நிறைந்த மனிதனோடு பேசி சமாளிக்க வேண்டியவராயிருந்திருக்கிறார். தேவனுடைய பிரதிநிதிகளாக வர்ணிக்கப்படுகிற ஆசாரியர், வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் இன்னும் வேறுசிலர்கூட, மனிதருடைய கற்பனைகள் மற்றும் கட்டளைகளின் பின்னே சென்றார்கள், ஆனபடியினால் அவர்கள் பகை, பொறாமை மற்றும் துன்மார்க்கத்தினால் நிறைந்து காணப்பட்டார்கள். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர் களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை" (யோவா.1:11) என அறிவிக்கப்படுகிறோம். மீண்டும் இயேசு, "அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை" (யோவா.5:40) என்றார்.

பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்பட்ட வேளையில் இந்த மார்க்க வைராக்கியமுள்ள ஜனங்களிடம் பேசுகையில் பேதுரு, "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங் களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரணஉபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" (அப்.2:22-24) என்றார். கிறிஸ்து பிலாத்து வினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டபோது, பொறாமை யினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார் களென்று பிலாத்து அறிந்திருந்தான் (மாற்.15:9). இவ்வாறாக கிறிஸ்து தவறாக குற்றஞ்சாட்டப்பட்டு சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுக்கப்பட்டார். துன்மார்க்கரின் கைகளில் அவர் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அடிக்கப்பட்டார், பரியாசம் பண்ணப்பட்டார், சபிக்கப்பட்டார், கொடூர சிலுவையில் ஆணியறையப்பட்டார், இரண்டு கள்ளர்கள் மத்தியில்

நிறுத்தப்பட்டு அங்கே மரிக்கும்படி கைவிடப்பட்டார். அதன்பிறகு அவர் கீழே இறக்கப்பட்டு, துணிகளால் சுற்றப்பட்டு, கல்லறையிலே வைக்கப்பட்டு, கல்லறை வாசலில் ஒரு பெரிய கல் புரட்டிவைக்கப்பட்டது. ஆனால் இயேசு தாம் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என வாக்களித்திருந்தார். மூன்று நாட்கள் கழித்து இயேசு உயிர்த்தெழுந்த கர்த்தராக கல்லறையிலிருந்து வெளியே வந்தார். மூன்றாம் நாள் காலையில், ஸ்திரீகள் கல்லறையைப் பார்க்கும்படி வந்தபோது, ஒரு தூதன் அவர்களுக்குத் தோன்றி, அவன், "அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்" (மத்.28:6) என்றான். இயேசு தம்முடைய அப்போஸ்தலருக்குத் தரிசனமான பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார், அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆட்சி செய்யும்படி மறுபடியும் வானத்திலே பிதாவினிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு (1கொரி.15:1-8; அப்.1:1-11) இன்றும் அங்கே வீற்றிருக்கிறார்.

இப்போது மீண்டும், இயேசு சிலுவையில் ஏன் மரித்தார்? அதற்குப் பல காரணங்கள் உண்டு, ஆனால் முக்கிய காரணம் மனிதனை இரட்சிக்கும்படிக்கு மரித்தார் என்பதே உண்மையாகும். ஆனால் கிறிஸ்து அவரது மரணத்தைக் குறித்து சொல்லிய தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றும்படி சிலுவையில் மரித்தார் (கொலோ.2:14,யோவா.1:17, மத்.26:28) மனிதன் தன்னுடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற வேண்டுமென அவர் தம்முடைய இரத்தத்தை சிந்த மரித்தார் (எபே1:7; அப்.22:16), சபையை ஸ்தாபிக்கும்படி மரித்தார் (எபே.5:25) மேலும் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொடுக்கும்படி மரித்தார் (2தெச.2:16).

ஆனால் கிறிஸ்து உலகத்தை இரட்சிக்கும்படி சிலுவையில் மரித்தார் என்பது உண்மையாகயிருந்தும், உலகமுழுவதிலும் அநேகர் இழந்தவர்களாக இருக்கின்றனர். ஏன்? இதற்கு பல காரணங்கள் உண்டு. அநேகர் தேவனுடைய சித்தத்தை அறியாதவர்களாக இருக்கின்றனர். பவுல், நான் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன் அறியாமையிலே நான் சபையை துன்பப்படுத்தினேன் என்றார் (1தீமோ.1:13) மற்றவர்கள் தாங்கள் இரட்சிக்கப்படும்படி தங்களில் அல்லது ஒரு சிறந்த நன்னெறி வாழ்வில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். ஆனால்


கொர்நேலியும் அவன் வீட்டாரும் நல்ல ஜனங்களாக யிருந்தார்கள், ஆனாலும் இரட்சிக்கப்படும்படி கர்த்தருக்குக் கீழ்ப்படிவது அவர்களுக்கு அவசியமாயிருந்து (அப்.10) தேவனுடைய மகிமையை விட மனுஷருடைய மகிமையை நேசிக்கிறவர்கள் அநேகர் உண்டு. கிறிஸ்து தம்மிடத்தில் விசுவாசமிக்கவர்காளாயிருந்தும் தங்களுடைய நாட்களின் மதத் தலைவர்களால் தாங்கள் புறக்கணிக்கப்படுவோம் என்ற பயத்தினால் தம்மை அறிக்கை பண்ணாதவர்களைக் குறித்து பேசி, பிறகு அவர்கள் ஏன் தம்மை அறிக்கை பண்ணவில்லை என்பதைப் பற்றி விவரிக்கிறார்: "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" (யோவா.12:43). ஆம், இன்றும் இவர்களை போல் அநேகர் உண்டு. அவர்கள் சமயக் காரியங்களில் வஞ்சிக்கப்பட்ட உலக ஜனங்கள். யோவான், "பிரியமானவர் களே, உலகத்தில் அநேகங்கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப் பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1யோவா.4:1). கள்ளப்போதகர்கள் அநேகர் இருக்கின்றபடி யினால், இப்போதும் கூட, அவர்களால் அநேகர் வழி தவறிப் போகின்றனர். மேலும் கடைசியாக, அநேகர் உலகத்தை நேசித்து, மாம்சத்தின் கிரியைகளில் சந்தோஷ மடைகின்றனர். இத்துடன் ஒரே பிரச்சனை என்னவென்றால் கர்த்தர் உலகத்தில் அன்பு கூராதிருங்கள் என்று நமக்கு சொல்லுகிறார் என்பதே. மேலும் மாம்சத்தின் கிரியைகள் மரணத்திற்கு இட்டுச் செல்லும் (கலா.5;ரோம.6:23).

என்னுடைய சிநேகிதரே, நீங்கள் இரட்சிக்கப்படும்படி கிறிஸ்து உங்களுக்காக மரித்தார் என்பதை அறிந்து கொண்டீர்களா? தயவுசெய்து அவரைப் புறக்கணியாதீர்கள் அல்லது இரட்சிக்கப்படும்படிக்கு அவர் ஒருவரே பரிகாரியா யிருக்கும் போது அவரை மறுதலிக்காதீர்கள். மேலும் அவர் ஒருவரே உங்களுக்கு நம்பிக்கை அளிப்பவர். அவரில் நீங்கள் விசுவாசம் வைத்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அவர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்து கொள்வார். மேலும் நீங்கள் அவரிடத்தில் விசுவாசமுள்ள வர்களாய் நிலைத்திருந்தால் ஒரு நாள் அவர் பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டை அருளிச்செய்வார் (மாற்.16:16; மத்.10:32; அப்.2:38,47; வெளி.2:10).

பெண்கள் பகுதி

# பூமி: படைப்பிலிருந்து பண்படுத்தப்பட்டது
## The Earth: Mature From Creation

*-Betty Burton Choate*



வேதவாக்கியங்கள் அழகாகவும், தெளிவாகவும், "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி.1:1) என விவரிக்கிறது. ஆறு நாட்களில் இந்த படைப்பு வெவ்வேறாக பிரிக்கப்பட்டதாக இந்த அதிகாரத்தின் மீதமுள்ள வசனங்களில் சிருஷ்டிப்பைக் குறித்து மேலும் பல விளக்கங்களை தேவன் கொடுத்தார். ஒவ்வொரு நாளின் இறுதியிலும், முழுவளர்சியடைந்த, நேர்த்தியான, சகலமும் அதனதன் வேலையினைச் செய்ய ஆயத்தமுள்ளதாக அந்த படைப்பு 'நல்லதென்று' தீர்மானிக்கப்பட்டது.

மூன்றாம் நாளில் தேவன், "வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லது என்று கண்டார்."

பின்பு தேவன், "பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று".

"பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார்"

"சாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று".

வெட்டாந்தரை காணப்பட்டபோது, அதில் சகலவித

புல் பூண்டுகளும் முளைக்கவில்லை, இன்னும் மழையும் பெய்யவில்லை, ஏனெனில் நிலத்தைப்பண்படுத்த அங்கே ஒருவரும் இருந்ததில்லை.

ஆனால் தேவன் வெட்டாந்தரைக்கு பூமியென்று பெயரிட்டு, அது புல்லையும் விதையைப்பிறப்பிக்கும் பூண்டுகளையும் முளைப்பிக்கக் கடவது என்று கட்டளையிட்ட போது, அந்த சமயம் தானே சிருஷ்டிப்பின் ஒழுங்கில் பூமியானது பண்படுத்தப்பட்ட பூமியாக காணப்பட்டது, அதைப் போலவே மிருகங்களும், மனிதனும் முழுவளர்ச்சியடைந்தவனாகவே சிருஷ்டிக்கப்பட்டு உண்டாக்கப்பட்டது. முதல் முதற்கொண்டே பலுகிப் பெரும் திறன் பெற்றவையாக இருந்தன; அவ்வாறே, பூமியும் தேவன் கட்டயிட்டவற்றையெல்லாம் நிறைவேற்ற என்னென்ன தேவையோ அவைகளையெல்லாம் கொண்டிருந்த பூரணமானதும் பண்படுத்தப்பட்டதுமாக இருந்தது.

**இதை ஆழ்ந்து யோசி:** தாவரங்கள் மண் இல்லாமல் வளராது. தாதுப்பொருட்களாலும், மழை, காற்று போன்றவற்றால் அடிக்கப்பட்ட தூள்களாலும் ஆனது தான் மண். ஆனால் பலனளிக்காத இவற்றிற்கு தாவரம் வளர வேறு இரண்டு கூட்டுப் பொருட்கள் சேர்க்கப்பட வேண்டும்:

✦ இதற்குத் தேவையானவை, மக்கிப்போன தாவரங்களும் விலங்குகளும்.

✦ சிதைவுற்று மக்கிப்போகப்பண்ணும் உயிருள்ள பொருட்கள் மற்றும் பாறைகளிலிருந்து நைட்ரஜனை எடுக்கக்கூடியதும் மேலும் தாவரங்கள் உயிர் வாழும்படிக்கு காற்று உருவாக்கும் சாரமேறிய சத்தும்.

ஒரு சதுர அடி மண்ணில் ஒரு இலட்சம் கோடிக்கும் அதிகமான உயிர்ஜந்துக்கள் இருப்பதாக பிரிட்டன் கலைக்களஞ்சியம் அறிவிக்கிறது!

**இதை ஆழ்ந்து யோசி:** பரிணாமக் கொள்கையினரின் கூற்று சரியென்றால், பலனளிக்காத மண்ணில் எவ்வாறு முதலாவதான தாவரம் வளர்ந்தது? ஆரம்பத்தில் "முதலாவதான தாவரங்கள்" வளரவும், மடிந்துபோகவும் அதன்பின் மற்றெந்த தாவரங்களும் வளர மக்கிப் போவதற்கு போதுமான சூழல் இருந்ததா?

பிறகு எவ்வாறு உயிர் ஜந்துக்களுடைய அந்த பெருக்கம், அந்த சிறிய ஜந்துக்கள், ஒரு செல் உயிரணும் கூட, வாழ்க்கை சக்கரத்தில் அந்த உயிர் ஜந்துக்கள் -இவைகளெல்லாம் எப்போது பெருக்கமடைந்தன அவைகள் சிதைவுறுதல் நடைபெறும்

படிக்கு தாவரங்கள், மற்றும் விலங்குகளின் வருகைக்கு முன் அந்த யுகங்களில் அது இருந்தனவா? அல்லது மண் அங்கஜீவிகளுக்கு முன்பாகவே தாவரங்களும் விலங்குகளும் யுகங்களைப் பெருக்கினதா? அல்லது எப்படியோ இரு ஜனத்தொகைகளும், ஆச்சரியவிதமாக, உடனடியாக ஒரே சமயத்தில், (ஆனால் பரிணாமத்திற்கு இலட்சக்கணக்கான வருடங்கள் தேவைப் படுகிறது) அதேவிதமான பலனளிக்காத மண்ணில் பெருக்க மடைந்ததா? பிறகு அங்கிருந்து பரவியதா? சிந்தியுங்கள்!

பரிணாமம் இந்த வினாவிற்கு பதிலளிப்பதேயில்லை. இது, பண்படுத்தப்பட்ட நிலத்தை "பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங் களையும் முளைப்பிப்பதற்கு......" (ஆதி.1:11) தேவன் தேவையான எல்லவித அம்சங்களோடு சிருஷ்டித்தார் என்பதை நம்புவதற்குப் பதிலாக இந்த பரிணாமம் பல பல காரியங்களை நம்பச்செய்வதற்கென உருவாக்குகிறது.

## பேசும் வேதாகமம் : 10

1. தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் எப்படிப்பட்டவர்கள்? - பாக்கியவான்கள் - வெளி.1:3
2. பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே யார்? - அந்திக்கிறிஸ்து - 1யோவா.2:22
3. நாவும் நெருப்புத்தான், அது எது நிறைந்த உலகம்? - அநீதி - யாக்.3:6
4. எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் யார்? - தேவன் - எபி.3:4
5. சுகபோகமாய் வாழ்கிறவள் எப்படிப்பட்டவள்? - உயிரோடே செத்தவள் - 1தீமோ.5:6
6. கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளை என்ன செய்யுங்கள்? - கடிந்துகொள்ளுங்கள் - எபே.5:11
7. புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் என்ன செய்யப் பண்ணும்? - உப்பப்பண்ணும் - கலா.5:9
8. மேன்மைபாராட்டுகிறவன் யாரைக்குறித்தே மேன்மைபாராட்டக் கடவன்? - கர்த்தரைக்குறித்தே - 2கொரி.10:17
9. கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் என்னசெய்யவேண்டும்? - முந்திக்கொள்ள - ரோம.12:10
10. சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை என்ன செய்யும்? - விடுதலையாக்கும் - யோவா.8:32.

# இயேசு எத்தனை சபைகளை கட்டினார்?

## How Many Church Did Jesus Build?

*- Tom Moore*

நீங்கள் எப்போதாவது ஏன் உலகில் இன்று பலதரப்பட்ட சபைகள் இருக்கின்றன என வியப்படைந்ததுண்டா? அவைகள் அனைத்தும் எங்கிருந்து வந்தது? ஏன் அவர்களுடைய போதனைகள் வேறுபட்டு காணப்படுகிறது? ஏன் அவைகள் வித்தியாசமான நாமங்களை அணிந்துள்ளன? அவைகள் அனைத்தும் சரியானவையா? முரண்பாடான கோட்பாடுகளை போதிக்கின்ற இரு சபைகள் சரியானதாக இருக்கமுடியுமா? இரு காரியங்கள் முரண்பாடாக இருக்கும் போது இரண்டும் சரியானதாக இருக்க முடியாதென தர்க்க சாஸ்திரம் நம்மை அறிவுறுத்துகிறது - அவையிரண்டும் ஒருவேளை தவறானதாகயிருக்கலாம், அல்லது ஒன்று சரியானதாகவும் மற்றொன்று தவறானதாகவும் இருக்கலாம் - ஆனால் அவைகள் இரண்டும் சரியானதாக இருக்க முடியாது!

எனவே உலகிலுள்ள வித்தியாசமான அனைத்து மார்க்கங்களைப் பற்றிய காரியம் என்ன? அவை சரியானதா அல்லது தவறானதா?

முதலாவது, நாம் இதைக்குறித்த இலக்கிய பிரமாணத்திற்கு செல்ல வேண்டியது அவசியம். **நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், நான் என்ன நினைக்கிறேன்** என்பது உண்மையாக இவ்விஷயத்தில் பொருத்தமானதாக இருக்கிறதில்லை, ஆனால் **வேதாகமம் என்ன** சொல்லுகிறது? பேதுரு, "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங் களின்படி போதிக்கக்கடவன்;" (1பேது.4:11) என பிரகடனப் படுத்தினார். மேலும் பவுல் "... தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக" (ரோம.3:4) என்று அறிவித்தார்.

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொண்ட இயேசு, "மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத்.16:18) என்று அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார்.

நம்முடைய கர்த்தர் தாம் ஒரு சபையை அல்லது தம்முடைய சபைகளில் ஒன்றை கட்டப் போகிறேன் என்றும் சொல்லவில்லை. அவர், **"என் சபையைக் கட்டுவேன்"** என்றார்.

ஆங்கில மொழியைப் பற்றி ஏதாவது அறிந்தவர்கள் 'சபை' என்பது ஒன்று என்று அர்த்தங்கொள்ளும் ஒருமையைக் குறிக்கிறது என்பதை அறிவார்கள். தவறான மார்க்கம் மற்றும் தவறான தொழுகையைப் பற்றி பேசுகின்ற சந்தர்ப்பத்தில், இயேசு, "...என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்" (மத்.15:13) என்று எச்சரித்தார். மேலும் பவுல், "..ஒரே சரீரம்" (எபே.4:4) மற்றும் "**அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே**" (1கொரி.12:20). என்று வெளிப்படுத்தினார்.

மேலும் பவுல் நம்மைப் பார்த்து, 'சரீரம்' என்பது 'சபை' என்கிறார். அப்போஸ்தலர் ஆவியின் ஏவுதலினால், "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ.1:18) என எழுதுகிறார். "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே.2:22,23). இந்த தர்க்க சாஸ்திரத்தை ஒத்துக்கொள்ளாத ஒருவன் என்னோடு அல்ல ஆனால் வல்லமையான தேவனோடு ஒத்துப்போகாத வனாயிருக்கின்றான். இதை வேதாகமம் கூறுகிறது, நான் இதை நம்புகிறேன். நீங்கள் நம்புகிறீர்களா?

கர்த்தருடைய சபையின் ஒருமனம் குடும்பசாயலிலும் காணப்படுகிறது. தேவன் பிதாவாயிருக்கிறார், கிறிஸ்து மூத்த சகோதரராயிருக்கிறார், மேலும் இரட்சிக்கப்பட்டுள்ள நாமெல்லாரும் "தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று .....நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோம.8:16,17) என்று வேதத்தில் வாசிக்கிறோம். **வேதாகமம் தேவன் நூற்றுக் கணக்காக வித்தியாசமான குடும்பங்களைக் கொண்டிருக் கிறவராகவும், ஒவ்வொன்றும் இன்னொன்றோடு மாறுபட்ட அபிப்ராயம் கொண்டிருக்கிறதாகவும், ஒவ்வொன்றும் தனிப்பட்ட வித்தியாசமான ஆட்சிமுறையைக் கொண்டிருக் கிறதாகவும், ஒவ்வொன்றும் வித்தியாசமான நாமங்களைத் தரித்திருக்கிறதாகவும் படம் பிடித்துக் காட்டுகிறதில்லை!**

ஒன்றுக்கு மேற்பட்ட சபையைக் குறித்துச் சொல்லுவது தேவன் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்களைக் கொண்டிருக்கிறார் என்று சொல்வது போலாகும். இது இருதார வாழ்வாகயிருக்கும். மனிதன் இப்பேர்பட்ட அருவருப்பான காரியத்தை வல்லமையுடையவர் மேல் பிரதிபலிக்கக்கூடாது.

இப்போது, இயேசு ஒரே ஒரு சபையைக் கட்டியிருப்பாரானால், வித்தியாசமான சகல பிரிவினை சபைகள் எங்கிருந்து வந்தன? உண்மையென்னவென்றால், அவைகள் மனிதனால் ஏற்படுத்தப்பட்டு, மனிதனால் கட்டப்பட்ட வைகளாயிருந்தன.

இயேசு ஒரே ஒரு சபையின் ஸ்தாபகராயிருக்கின்றபடியால், நான் அங்கத்தினராயிருக்க விரும்பும் சபையும் அந்த ஒரே சபை தான். நீங்கள் எப்படி? மனிதனால் உருவாக்கப்பட்ட சபையில் அங்கத்தினராக இருப்பதைத் தெரிவுசெய்வீரா? அல்லது இயேசுவினால் கட்டப்பட்டு, கிரயத்துக்கொள்ளப்பட்ட, தம்முடைய சுய இரத்தத்தினால் கழுவப்பட்ட சபையில் அங்கமாயிருப்பதைத் தெரிவு செய்வீரா? (அப்.20:28). சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இயேசுவினால் கட்டப்பட்ட சபையில் இருக்கின்றன என்பதை நினைவு கூருங்கள் (எபே.1:3). இப்போது அது எளிமையானது, அது தெளிவானது, அதை நம்மெல்லாராலும் அறிந்து கொள்ளக் கூடியது! நீங்கள் அந்த ஒரே சபையை தேடிக் கொண்டிருக்கிறீர்களா?

**எச்சரிப்பின் வார்த்தை**
**A Word of Exhortation**

**எபிரெய புத்தகத்திலிருந்து 'பின்பற்றக் கடவோம்'**

1. பயந்திருக்கக் 'கடவோம்' 4:11
2. ஜாக்கிரதையாயிருக்கக் 'கடவோம்'– 4:11
3. உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் 'கடவோம்' – 4:14
4. ஜெபிக்கக் 'கடவோம்' – 4:16
5. பூரணராகும்படி கடந்து 'போவோமாக' – 6:1
6. நிச்சயத்தோடும் சேரக் 'கடவோம்' – 10:22
7. ஒருவரையொருவர் கவனிக்கக் 'கடவோம்' – 10:24
8. பாரமான யாவற்றையும் தள்ளக் 'கடவோம்' – 12:1
9. பொறுமையோடே ஓடக் 'கடவோம்' – 12:1
10. கிருபையைப் பற்றிக்கொள்ளக் 'கடவோம்' –12:28
11. அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக் 'கடவோம்' – 13:13
12. தேவனுக்குத் துதி செலுத்தக் 'கடவோம்' –13:15

# வேதாகம ஆலோசனை

"இவைகள் பேதைகளுக்கு வினாவையும்,
வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும்.
புத்திமான் இவைகலைக் கேட்டு, அறிவில் தேறுவான்;
விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும்,
அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும்,
அவர்கள் உரைத்த புதை பொருள்களையும்
அறிந்துகொள்வான்"(நீதி.1:4-6)

**வேதாகம ஆராய்ச்சி பாடம்-1**

**7. வேதத்தை தியானிக்க அல்லது படிக்க எந்த நேரத்தை ஒதுக்குவது?**

"உமது வசனத்தை தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்" (சங்.119:148) என்கின்றான் தாவீது. அப்படியானால் அவன் நித்திரைக்கு செல்லுமுன்னும் அவனுடைய என்னமெல்லாம் குறித்த இரவுக்கு முன்னே விழித்து வசனத்தை தியானிக்க வேண்டும் என்பதே. நம்மிலே எத்தைனைபேர் டைம்பிஸ் அலாரம் செட் பண்ணி வைத்து அதிகாலை அல்லது இருட்டோடே எழுந்து வசனத்தை தியானிக்கிறோம். சபையிலே வசனத்தைப் பிரசங்கிக்கும் போது அநேகர் தூங்குவதை பார்க்கிறோம். தாவீதோ குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும் என்கின்றான். இது தாவீதின் ஆர்வத்தைக் காட்டுகிறது.

மேலும் தாவீது சொல்வதைக் கவனியுங்கள் "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும் உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்" (சங்.119:103,104). தேவனுடைய கட்டளைகளால் உணர்வடையும்போது எல்லாப் பொய்வழிகளையும் வெறுப்போம். உணர்வடையாத பட்சத்தில் நமக்குள் இந்தவிதமான உணர்வுஎழவாய்பில்லை. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும் என்ற கேள்வியை எழுப்பி ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டார்கள். இதுவே உணர்வடைந்ததற்கு மாதிரி என்று சொல்லலாம். கட்டளையைக் கேட்டு செவிட்டு விரியனைப்போல செல்வோமானால் இரட்சிக்கப்படுவது கூடாதகாரியம்.

வீணான சிந்தனைகளினால் அநேகர் வீணாய் போய்விடுகிறார்கள். மனிதனுடைய மாமிசமும், சாரமற்ற உப்பும் ஒன்றுக்கும் உதவாமற் போவதுபோல மனிதனுடைய வீணான சிந்தனைகளும் ஒன்றுக்கும் உதவாமற்போய்விடுகிறது. இவைகளை மேற்கொள்ள தாவீது "வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்" (சங்.119:113) என்கிறான். நீங்களும் வீண் சிந்தனைகளை தள்ளிவிட்டு வேதத்தில் உள்ள வசனங்களை தியானிக்கும்படியாக நமக்கு கொடுக்கப் பட்ட 24 மணிநேரத்தில், எந்த நேரத்திலும் வேதாகமத்தை புரட்டிப்பார்க்க ஆயத்தமாக இருக்கவேண்டும்.

# சந்திப்போம்! சிந்திப்போம்!

உரையாடல் - 36

D.எபிநேசர்

**தாவீது:** ஆவியானவரின் வருகையைத்தான் அங்கே யோவேல் தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறார். இயேசு கிறிஸ்துவின் வருகை எப்படி முன்னறிவிக்கப்பட்டதோ, அதுபோலவே ஆவியானவரின் வருகையும் முன்னறிவிக்கப்பட்டது. கிறிஸ்து பிறக்கும்போது என்னவெல்லாம் சம்பவிக்கும் என்று முன்னறிவிக்கப்பட்டதோ, அதுபோலவே ஆவியானவரின் வருகையின்போதும் என்னவெல்லாம் சம்பவிக்கும் என்றும் முன்னறிவிக்கப்பட்டது.

**யோனத்தான்:** ரொம்ப ஆச்சரியமா இருக்குப்பா!

**தாவீது:** அறிவிப்பே ஆச்சரியமென்றால், அந்த சம்பவங்கள் அப்படியே நடந்ததும், அந்த முன்னறிவுப்புகள் அவ்வாறே நிறைவேறியதும் எவ்வளவு ஆச்சரியம்!

**யோனத்தான்:** அப்படியானால் அந்த தீர்க்கதரிசனங்களுக்கும் அவைகள் நிறைவேறியதற்கும் சரியான வசனக்குறிப்புகளைத் தரமுடியுமா?

**தாவீது:** நிச்சயமாக! குறித்துக் கொண்டு பொறுமையாய் படி.

**கிறிஸ்து பிறப்பு:** ஏசா7:14 **நிறைவேறுதல்:** மத்.1:22,23

பிறந்த ஊர்: மீகா5:2 " நிறைவேறுதல்: மத்.2:1,5,6 சம்பவங்கள்:எரே.31:15,ஓசி.11:1

நிறைவேறல்: மத்.2:16-18, மத்.2:14,15. (கிறிஸ்துவின் ஊழியம், மரணம் உயிர்த்தெழுதல் அனைத்தும் முன்னறிவிக்கப்பட்டு, நிறைவேறியதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது)

**ஆவியானவரின் வருகை:** யோவே.2:28-32

நிறைவேறுதல்: அப்.2:16-21; 2:1-4

நிறைவேறும் ஊர்: ஏசா.2:3; அப்.1:4,12; 2:5

**யோனத்தான்:** அப்படியானால் அந்த வசனம் நிறைவேறிவிட்டது என்று சொல்கிறாயா?

**தாவீது:** நீ படித்த வசனத்தில் அப்படித்தானே எழுதப்பட்டிருக்கிறது? எங்கே அப்.2:16 ஐ மட்டும்

மீண்டும் வாசி.

**யோனத்தான்:** "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது".

**தாவீது:** இப்போது விளங்கிவிட்டதா?

**யோனத்தான்:** அப்படியானால் ஆவியானவர் இப்போது ஊற்றப்படமாட்டாரா?

**தாவீது:** கிறிஸ்து மீண்டும் பிறப்பாரா?

**யோனத்தான்:** மாட்டார்.

**தாவீது:** அதுபோலவே ஆவியானவரும் மீண்டும் ஊற்றப்படமாட்டார்!

**யோனத்தான்:** அப்படியானால் பரிசுத்த ஆவியானவரை நாம் இப்போது பெற்றுக்கொள்ளும் வழி!

**தாவீது:** ம். அப்படிக் கேளு, ஆனா அடுத்த சந்திப்பில் கேளு!

**Bye. (மீண்டும் சந்திப்போம்)**

## வேத அறிவுப்போட்டி எண் 60-ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| S. தண்டபாணி | -சிலுவத்தூர் | Mrs. கிலாடிஸ்சேவியர் | -கூடலூர் |
| G.கிரேஸ்ஜெயா | -வெள்ளகுளம் | P. அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு |
| V. கோவலன் | -மதுரை | S. ஆனந்தராஜ் | -ஈரோடு |
| S.சாரதாபேலிக்ஸ் | .-சென்னை | V.F. ஷர்லோ | -பாண்டிச்சேரி |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை | குளோரிபெளஸ்ஷர் | -சென்னை |
| S. சாம் பிச்சை | -மதுரை | S.R. பெரியசாமி | -செல்லூர் |
| P.S. லலிதாபிரேமகுமாரி | -மதுரை | G.S. செபஷ்டியன் | -திண்டுக்கல் |
| Mrs.ஜாஸ்மின் வின்சென்ட்ராஜ்-மதுரை | | R. டேவிட் | -ரெட்டிப்பட்டி |
| G.P.ஏசையன் ராஜ் | -கோபி | P. டெவிட் | -புதுக்கோட்டை |
| D.ஏசையன்ராஜ் | -சித்தூர்(A.P) | E. டென்சிங்மனோகர் | -மதுரை |
| | EX.ARMY | A.சேவியர்மேரி | -மதுரை |

## வேத அறிவுப்போட்டி எண் 60-ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. விரோதமாயிருக்கிறது | -யோபு24:23 | 5. பயங்கரமானவர் | -சங்76:12 |
| 2.அகிரிப்பா,பவுலை | -அப்26:28 | 6. உங்கள் | -ரோம2:24 |
| 3. சகாமல் பிழைக்கவே பிழைப்பான் | -எசே33:15 | 7. பொல்லாப்பைக் | -ஏரே23:11 |
| 4. பவுல் | -2கொரி1:8 | 8. கோபமூட்டாதிருங்கள் | -கொலோ3:21 |
| | | 9. இறுமாப்பாயிருக்கும் | -நீதி18:12 |
| | | 10. நிலைத்திருக்கக் | -1கொரி7:24 |

வாலிபர் பகுதி

# சோதனை யாருக்கு?

*P.Balakrishnan*



கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமும், வாஞ்சையும் நிறைந்த சகோதர, சகோதரிகளுக்கு இறைமகன் இயேசுவின் நாமத்தினால் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

நாம் வாழும் அன்றாட வாழ்க்கையில் பல சோதனைகளை கடந்து வந்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். சோதனை யாருக்கு அதிகமாக வருகிறது என்று வேதாகமம் நமக்கு அழகாக போதிக்கிறது. நம்முடைய சரீர பிரகாரமான தாய், தந்தையர் சரியான வழியிலே வாழ வேண்டும் என்பதற்காக,' நம்மை சிட்சித்து வழி நடத்துவார்கள்.ஏனென்றால் அவர்கள் நம் இளமையைக் குறித்து யாரும் அசட்டை செய்துவிடக் கூடாதென்று, நம்மேல் வைத்த அன்பினால் நம்மை நல்வழியிலும், அறநெறியிலும் நடத்த வேண்டும் என்று அதிகமாய் பிரயாசப்படுவதைப் பார்க்கிறோம். "நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா?" *(எபி.12:9).*

கர்த்தர் யார் மேல் அன்பு கூறுகிறாரோ அவர்களை சிட்சிக்கிறார்: "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்;" *(வெளி.3:14).* அதேவேளையில் "தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல" *(யாக்.1:13).*

நீதிமானுக்கு துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்" *(சங்.34:19).* "கர்த்தர் தேவ பக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" *(2பேது.2:9).* "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு

நேரிடவில்லை தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடே கூட அதற்குத் தப்பித்துக் கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குகிறார்" (1கொரி.10:13) என்று பவுல் கூறுகிறார். மேலும் "சுவிசேஷத்தின் நிமித்தம் துன்பத்தை அநுபவிக்கிறேன்" (2தீமோ.2:9) என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறான்.

ஒரு கிறிஸ்தவனுக்கு பாடுகள் அநேகம் உண்டு. "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" (1பேது.4:16).மேலும் "கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" (1பேது.4:13). ஒருவகையில் பாடுகளிருந்தாலும் அவருடைய மகிமை வெளிப்படும்போது சந்தோஷம் உண்டு ஆகையால் பாடுகளை நினைத்து சந்தோஷப்படவேண்டும். "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்" (யாக்.1:12).

"இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்" (1பேது.1:6). கொஞ்சக்கால பாடுகளிலே நாம் சோர்ந்துபோகாது நிலைத்திருப்போமானால் வாடாத ஜீவகிரீடத்தைப்பெறுவோம். எனெனில் "கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது"(பிலி.1:29).


ஆகையால் எனக்கு அன்பான வாலிப சகோதர சகோதரிகளே, நமக்கு மிகப் பெரிய சோதனை நிறைந்த போராட்டம் இருக்கிறது. இப்படிப்பட்ட சோதனைகளை வென்று சாதனை படைத்திட பரமபிதா சொன்ன வார்த்தைகளைக் கைக்கொண்டு, நாம் ஒருவரும் கண்களினால் காணாததும் மனுஷனுடைய கைவேலையில்லாத நம் பரம பிதா வீட்டிலே பிரவேசிக்க, நாம் இந்த மாய உலகத்தில் பல சோதனைகளை சகித்து பரமன் வாழும் இடத்தை நோக்கி செல்ல பிரயாசப்படுவோம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!...

## பொது அறிவுச் சோதனை

1. முதல் அணுசக்தி நீர் மூழ்கி கப்பல் எந்த நாட்டில் உருவாக்கப்பட்டது?
   அ)பிரான்சு ஆ)சீனா இ)அமெரிக்கா
2. சந்திரன் ஒரு முறை தன்னைத்தானே சுற்றிக் கொள்ள எவ்வளவு காலம் எடுத்துக்கொள்ளும்?
   அ)இருபது நாட்கள் ஆ)முப்பது நாட்கள் இ)இருபத்தெட்டு நாட்கள்
3. இரண்டாவது உலகப்போர் எப்போது முடிவுக்கு வந்தது?
   அ)14-8-1945 ஆ)8-6-1945 இ)1-10-1944
4. எரியும்போது வெண்மையான சுடரை கொடுக்கும் உலோகம் எது?
   அ)இரும்பு ஆ)தாமிரம் இ)மெக்னீசியம்
5. இந்திய அரசியல் சட்டத்தில் சிறப்பான இடத்தை பெறுபவர் யார்?
   அ)பிரதமர் ஆ)ஜனாதிபதி இ)கவர்னர்

விடைகள்: 1.அமெரிக்கா 2.இருபத்தெட்டு நாட்கள் 3.14-8-1945 4.மெக்னீசியம் 5.ஜனாதிபதி


**நீங்கள் இராஜகிரியில் இருந்தால் இராஜகிரியில் உள்ள சபையில் கலந்து கொண்டு தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதியுங்கள்**



உங்களை அன்புடன் வரவேற்கும் சபை ஊழியர்
மற்றும் சபையார்கள்.
P.கோவிந்தராஜன், கிறிஸ்துவின் ஊழியர்
**கிறிஸ்துவின் சபை**
9,371 எம். ஜி. ஆர் நகர்
இராஜகிரி (P.O)
தஞ்சாவூர் மாவட்டம்
தமிழ்நாடு - 614 207
இந்தியா.


*ஜெபியுங்கள்*
*வருகின்ற மாதத்திலிருந்து 2100 இதழ்கள் வெளிவர.....*
*துவங்கவுள்ள புதிய ஊழியங்களுக்காக.....*
*மாவட்டங்கள் தோறும் சபைகள் எழும்ப.....*

சிறுவர் பகுதி

# பரிதானம்

*வேத பகுதி:2நாளாகமம்19:1-7*

யூதாவை அரசாண்ட யோசபாத் என்னும் ராஜா எருசலேமிலுள்ள தன் வீட்டிற்குச் சமாதானத்தோடே ஒருமுறை வந்தான். அப்பொழுது ஞானதிருஷ்டிக்காரனாகிய யெகூ என்பவன் அவனை சந்தித்து துன்மார்க்கனுக்குத் துணைநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? இதினிமித்தம் கர்த்தருடைய கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது. ஆனாலும் நீர் விக்கிரகத்தோப்புகளை தேசத்தை விட்டகற்றி, தேவனைத் தேட உம்முடைய இருதயத்தை நேராக்கின விஷயத்தில் நன்மையான காரியங்கள் உம்மிடத்திலே காணப்பட்டது உண்டு என்றான்.

ஆகையால் யோசபாத் என்ன செய்தான் தெரியுமா? எருசலேமிலே வாசமாயிருந்து, திரும்பப் பெயர்செபா தொடங்கி, எப்பிராயீம் மலைத்தேசமட்டுமுள்ள ஜனத்திற்குள்ளே பிரயாணமாய்ப்போய், அவர்களைத் தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் இடத்திற்குத் திரும்பப்பண்ணினான். அதுமட்டுமா நியாயாதிபதிகளை நோக்கி: நீங்கள் செய்கிற காரியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நியாயம்விசாரிக்கிற விஷயத்திலே அவர் உங்களோடு இருக்கிறார். கர்த்தருக்கு பயப்படும் பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சினியமும் இல்லை, **பரிதானமும்** அவரிடத்தில் செல்லாது என்றான்.

ஆம், கர்த்தரிடத்தில் அநியாயமும் முகதாட்சினியமும் இல்லை, பரிதானமும் அவரிடத்தில் எடுபடாது. ஆனால் இன்று உள்ள நியாயாதிபதிகளிடத்தில் இவைஎல்லாம் பார்க்கிறோம். நீங்களோ இந்த யோசபாத் ராஜாவைப் போல கர்த்தருக்கு பயந்து விக்கிரகங்களை உங்களை விட்டு அகற்றிப் போட்டு கர்த்தருடைய நீதியையும் நியாயத்தையும் தேடுங்கள். நீங்கள் எங்கு சென்றாலும் கர்த்தருடைய கட்டளைகளை பிரஸ்தாபப்படுத்துங்கள். இந்த சிறு பிராயத்திலே நற்காரியங்களைக் கற்றுக் கொள்ளுங்கள் அவர் உங்களோடு இருப்பாராக!

**மனப்பாட வசனம்:**

"கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது, எச்சரிக்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை, பரிதானமும் அவரிடத்திலே செல்லாது" (2நாளா.19:7)

## வேத அறிவுப் போட்டி எண்-61

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

**கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். <u>உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.</u>**

1. செத்த நாயைப்போலிருக்கிற என்னை நீர் நோக்கிப் பார்க்கிறதற்கு, உமது அடியான் எம்மாத்திரம் என்றவன் யார்?
2. கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்: அப்பொழுது முதலாவது எழுந்திருப்பவர்கள் யார்?
3. தண்ணீரை தங்கள் கையால் அள்ளி, தங்கள் வாய்க்கொடுத்து, நக்கிக்கொண்டவர்களின் லக்கம் எத்தனை?
4. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
5. கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம்மாறுதலைக் காணாமற்போனவன் யார்?
6. யோசுவா இஸ்ரவேல் புத்திரரை எந்த மேட்டிலே விருத்தசேதனம் பண்ணினான்?
7. உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது எது?
8. ஒரு வழியாய் உனக்கு எதிராய் புறப்பட்டு வருவார்கள், எத்தனை வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்?
9. யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான எதுவும் இல்லை?
10. கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக என்று சொன்ன பிரதான தூதன் யார்?

## நடப்புச் செய்திகள்

- உலகத்தரமான கைவினைஞர்களை உருவாக்க சென்னை உள்பட 4 நகரங்களில் தொழிற்பயிற்சி மையங்களைத் தொடங்குவதற்கு முதல் அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார்.
- பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கண்டனம்: முஸ்லீம் அல்லாதவர்களுக்கு எதிராக புனிதப்போர் நடத்த வேண்டுமென்பதை வற்புறுத்தும் வாசகங்கள் பாகிஸ்தானில் உள்ள பாடப்புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன. இது மிகவும் கண்டிக்கத்தக்கது.
- ஜப்பானைச் சேர்ந்த யமகா மோட்டார் நிறுவனம், இந்தியாவில் இரண்டாவது புதிய துணை நிறுவனம் ஒன்றை தொடங்க உள்ளது.
- இந்திய கிரிக்கெட் நட்சத்திரவீரர் தெண்டுல்கருக்கு ராஜீவ்காந்தி விருது மும்பையில் நடந்த விழாவில் வழங்கப்பட்டது.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th Sep. 2005.




**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க**
**அன்புடன் அழைக்கிறோம்**
**கிறிஸ்துவின் சபை**

17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம்.
போன்: 04543-263278 செல்: 9443558041
E-mail:thewordofchrist@sancharnet.in
arjunglory@yahoo.co.in



"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்
**The Master Course**
தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.15/- செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்



**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box 5, BATLAGUNDU - 624 202
S.INDIA

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா -ரூ.50/-
வெளிநாடு - ரூ.500/-
தனிப் பிரதி - ரூ.5/-

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box 5
Batlagundu - 624 202
S. India